தனது தொகுதி சம்பந்தமாக உறுப்பினர்கள் பிரச்சினைகளை, சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது உறுப்பினர்கள் தொகுதிக்கு ஆற்ற வேண்டிய கடமையாகும். எனினும் அவ்வாறு செயல்படும்போது உறுப்பினர்கள் அமலில் உள்ள 'சிவில்' மற்றும் 'கிரிமினல்' சட்டங்களுக்கு உட்பட்டுத்தான் பணியாற்ற வேண்டும். அவ்வாறின்றி உறுப்பினர்கள் குற்ற இயல் சட்டங்களுக்குப் புறம்பாக ஏதேனும் செயல்புரிந்து அதற்காக அவர்கள் தடுக்கப்பட்டாலோ, நடவடிக்கை தொடரப்பட்டாலோ, அல்லது தண்டிக்கப்பட்டாலோ அது பேரவையின் உரிமையை மீறியதாகவோ அல்லது பேரவையை அவமதித்ததாகவோ அமையாது.

மேலும் திரு. இராஜசேகரன் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதால் அவ்வழக்கு நீதி மன்றத்தில் விசாரிக்கப் பெறும்போது தான் எது சரியான தகவல் என்பது தெரியவரும்.

எனவே, எழுப்பப்பெற்றுள்ள பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில்கூட அவை உரிமை மீறல் எழவில்லை எனத் தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) ஊரகத் தொழில் அமைச்சர் மீது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் 1981-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29-ஆம் நாளன்று உறுப்பினர் திரு. நா. சுந்தரராஜ் அவர்கள் எழுப்பிய உரிமை மீறல் பிரச்சினைக்கு அளித்த தகவல்கள் குறித்து உறுப்பினர் திரு. இராஜசேகரன் அவர்கள் ஒரு. உரிமை மீறல் பிரச்சினைக்குப் பேரவையின் 246-ஆவது விதியின் கீழ் அறிவிப்புக் கொடுத்திருந்தார். இது பேரவையில 1981-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10-ஆம் நாளன்று எடுத்துக் கொள்ளப் பெற்றது. திரு. இராஜசேகரன் அவர்கள் இப்பிரச்சினை குறித்து விவரங்களை அளித்துள்ளார். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும் இது குறித்து விவரங்களைத் தந்துள்ளார்.

தாம் கைது செய்யப்பட்டது குறித்தும், மருத்துவமனையில் தமக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த தகவல்கள் தவறானவை என்று குறிப்பிட்டு, எனவே அவை உரிமை மீறல் ஏற்பட்டுள்ளது என்று திரு. இராஜசேகரன் அவர்கள் கூறினார்கள்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அளித்த தகவலில், இந்த நிகழ்ச்சி, பேரவைக்கு வெளியிலே நடைபெற்றுள்ளது என்றும், அது தொடர்பானவற்றை காவல் துறையினரைக் கேட்டபோது அவர்கள் அளித்த தகவலைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார்கள் என்றும் திரு. இராஜசேகரன்

1981 மார்ச் 5] [பேரவைத் தலைவர்]

அவர்களைப் பற்றித் தவறான தகவலைத் தர வேண்டும் என்பது நோக்கமல்ல என்றும், குறிப்பிட்டார்கள். மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வெளியிலே நடந்தது முழுவதும் தெரிந்திருக்கும் எனினும் இந்த அவையைத் திசை திருப்ப வேண்டுமென்ற நோக்கத்தோடு கூறினார் என்று சொல்ல முடியாது. உறுப்பினருக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில சொல்லப்படவில்லை என்றும், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் அவர் கூறுகையில். வழக்கு ஒன்று விசாரணையில் இருப்பதன் காரணமாக இதிலே உண்மை நிலை கட்டாயமாகத் தெரியவரும் என்றும், அப்போது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுமேயானால் அந்த வகையில் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதையும் குறிப்பிட்டார்.

எனவே, மாண்புமிகு அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் உள்நோக்கோடும், உறுப்பினருக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணத்தோடும் எந்தத் தகவலையும் பேரவைக்கு அளிக்கவில்லை என்பதாலும், என்ன நடந்தது, எப்படி நடந்தது என்பது வழக்கு விசாரணை முடிந்தபின்தான் தெரியவரும் என்பதாலும், இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

3. தகவல் கோரல்.

(அ) பதிவு செய்யப்பெற்ற டேப்.

*டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நேற்றைய தினம் விவாதிக்கப்பட்ட உரிமைப் பிரச்சினையைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. இங்கே உரிமைப் பிரச்சினை பற்றிப் பேசிய முதலமைச்சரவர்கள், திரு. அன்பரசு, எம். பி. அவர்கள் காஞ்சிபுரம் நகர விழாவிலே பேசியது குறித்துக் குறிப்பிட்டார்கள். இன்று காலையில் திரு. அன்பரசு, எம். பி. அவர்கள் என்னுடன் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு தான் அவ்வாறு பேசவில்லை என்று கூறி, அது சம்பந்தமாக அறிக்கை விடுவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால் நேற்று மாண்புமிகு முதலமைச்சர் இங்கே டேப்பை எடுத்துக் காட்டி, பேசியிருப்பதாகச் சொன்னார்கள். நாங்கள் எங்களுடைய சந்தேகத்திற்கு விளக்கம் பெறுவதற்காகத் தாங்கள் தங்கள் அறையில் எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து, அவை முன்னவரவர்களையும் வைத்துக்கொண்டு அந்த டேப்பைப் போட்டுக் காட்டுவீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவரையில் டேப் போடுவது சபையின் மரபாக இருந்ததாகத் தெரியவில்லை.